**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்**
**அ.வ.எண். 42/2021**

பெயர் : செல்வராஜ்
சாட்சி – வா.சா–1 நாள்: 05.08.2025

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பு)**

1. வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தின் மூலம் கிரயம் பெற்ற சொத்தானது க.ச.610/1சி காலை என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 கிரைய பத்திரத்தின் மூலமாக நான் க.ச.610/1சி காலைக்கு கட்டுப்பட்ட 1 ஏக்கர் என்று குறிப்பிட்டு தான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். க.ச.610/1சி காலையில் குமாரசாமிக்கு பிரதிவாதி கிரையம் கொடுத்தது 95 சென்ட் பூமி தான் என்றால் சரிதான். க.ச.610/1சி காலையில் குமாரசாமிக்கு அவர் கிரயம் பெற்ற 95 சென்ட் பூமியை தவிர வேறு பூமி பாத்தியம் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. க.ச.610/1சி காலையில் குமாரசாமி 95 சென்ட் மட்டுமே கிரையம் பெற்றிருந்தாலும், அதனை மறைத்து எனக்கு மேற்படி காலையில் 1.17 ஏக்கர் என்று குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்று தான் சொத்தினை வாங்கினேன். நான் சொத்தினை வாங்குவதற்கு முன்பாக சொத்து சம்பந்தமான ஆவணங்களை பார்வையிட்டு தான் வாங்கினேன் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.5 கிரைய பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள க.ச.610/1சி காலைக்கு உண்டான வருவாய் ஆவணமான கணினி சிட்டாவில் விஸ்தீரனமானது 76 ஏர்ஸ் அதாவது 1.87 ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1.87 ஏக்கர் பூமியில் குமாரசாமிக்கு 95 சென்ட் பூமியும், ஜோதிமணிக்கு 75 சென்ட் பூமியும் மட்டும்தான் பாத்தியம் என்றால் சரிதான். 1.87 ஏக்கர் பூமியில் மீதமுள்ள 17 சென்ட் பூமி ஆனது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் கிடையாது.

4. வா.சா.ஆ.5 கிரைய பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள க.ச.610/1 சி காலைக்கு உண்டான வருவாய் ஆவணமான கணினி சிட்டாவில் முதல் பெயரே ராமசாமி கவுண்டர் மகன் முத்துசாமி என்று பிரதிவாதியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரயம் பெறும் போது கிரைய பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள கணினி சிட்டாவில் பிரதிவாதியின் பெயரான முத்துசாமி பெயர் உள்ளது என்பது சம்பந்தமாக நான் ஏதேனும் சந்தேகம் எழுப்பினேனா என்றால் இல்லை.

5. நான் சொத்து கிரையம் பெற்று சுவாதீனம் எடுத்த பின்னர் உட்பிரிவு தவறாக உள்ளது என்று வருவாய் கோட்டாட்சியரிடம் ஏதேனும் மனு அளித்தேனா என்றால் இல்லை. நான் கிரயம் பெற்ற பின்னர் பிரதிவாதியின் பெயர் க.ச.610/1 சி காலைக்கு உண்டான வருவாய் ஆவணங்களில் உள்ளதற்காக அவரது பெயரை நீக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன். தற்போது பிரதிவாதியின் பெயர் நீக்கப்பட்டுள்ளது. க.ச.610/1 சி காலைக்கு உண்டான வருவாய் ஆவணங்களில் இருந்து பிரதிவாதியின் பெயர் நீக்கப்பட்ட பின்னர் அதனை காண்பிப்பதற்கு புதிய கணினி சிட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில் இல்லை.

6. நான் இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பு வில்லங்கச் சான்றிதழ் போட்டு பார்த்து, வருவாய் ஆவணங்களை சரிபார்த்து தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். க.ச.610/1 சி காலையில் குமாரசாமிக்கு 95 சென்ட் பூமியும், ஜோதிமணிக்கு 75 சென்ட் பூமியும் பிரதிவாதி கிரயம் கொடுத்த பின்னர் மீதமிருந்த 21 3/4 சென்ட் பூமியில் 20 1/4 சென்ட் பூமியை தனது மனைவி சரஸ்வதிக்கு 24.09.2020 தேதியில் செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. மேற்படி 24.09.2020 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பின்னர் பிரதிவாதி அவரது மனைவி பெயருக்கு எழுதி வைத்துள்ள 20 1/4 சென்ட் பூமியானது க.ச.610/1 சி1 காலையாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. க.ச.610/1 சி1 காலைக்கு உண்டான வருவாய் ஆவணமான கணினி சிட்டாவில் முதல் பெயரே ராமசாமி கவுண்டர் மகன் முத்துசாமி என்று பிரதிவாதியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். (**க.ச.610/1 சி1 காலைக்கு உண்டான கணினி சிட்டா பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது**)

8. க.ச.610/1 சி1 காலைக்கு உண்டான கணினி சிட்டாவில் எனது பெயர், ஜோதி மணியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது நடைமுறையில் க.ச.610/1 சி மற்றும் க.ச.610/1 சி1 காலைகள் உள்ளது என்றால் சரிதான். க.ச.610/1 சி1 காலைக்கு உண்டான வருவாய் ஆவணங்களில் உள்ளதற்காக பிரதிவாதி பெயரை நீக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. க.ச.610/1 சி1 காலைக்கு உண்டான வருவாய் ஆவணங்களில் பிரதிவாதி பெயர் உள்ளதாக நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. க.ச.610/1 சி காலையில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 21 3/4 செண்ட் பூமியை ஆக்கிரமிக்க வேண்டும் என்பதற்காக நான் குமாரசாமி வகையறாவுடன் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்டுள்ள வா.சா.ஆ.5 ஆவணமானது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பொறுத்து செல்லத்தக்கது அல்ல, அவரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. குமாரசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு அதிகமாக குறிப்பிட்டு நான் குமாரசாமி வகையறாவிடமிருந்து கிரயம் பெற்றுவிட்டு நான்தான் பிரதிவாதிக்கு அவரது சுவாதீனத்திற்கு இடையூறு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. நான் வழக்கு சொத்தினை கிரயம் பெறுவதற்கு முன்பாகவே பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அவரது மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும், பிரதிவாதியின் மனைவியான சரஸ்வதி இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்றும், நான் அவரை இந்த வழக்கில் சேர்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது அவசியத்தரப்பினரை இந்த வழக்கில் சேர்க்காத காரணத்திற்காக இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

11. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 21 3/4 செண்ட் பூமியை அபகரிக்க வேண்டும் என்று வழக்கு மூலமே இல்லாமல் பொய்யான சங்கதிகள் உடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. க.ச.610/1 சி காலையில் குமாரசாமிக்கு 95 செண்ட் பூமி மட்டுமே பாத்தியம் உள்ளபோதும், அதற்கும் அதிகமாக அவர் கிரயம் கொடுத்துள்ளதால் வழக்கு சொத்தில் உரிமை மூல பிரச்சனை எழுந்துள்ளது என்றும், எனவே நான் தாவா சொத்து சம்பந்தமாக விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் மட்டும் கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

12. பிரதிவாதி தாவா சொத்தில் 21 3/4 சென்ட் அளவிற்கு உரிமையாளர் என்பதால் உண்மையான உரிமையாளருக்கு எதிராக நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோர முடியாது என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.08.05 18:20:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.